தீபாவளியன்று 15 பேர் கொலை :

த.வெ.க. ஆட்சியில் - காவல்துறை அதிகாரிக்கே பாதுகாப்பு இல்லாத கொடூரம்!

பிரேமலதா விஜயகாந்த் உள்ளிட்ட கட்சித் தலைவர்கள் கடும் கண்டனம்!

சென்னை, நவ.12-

‘தீபாவளியன்று ஒரே நாளில் 15 பேர் வெட்டிக்கொலை செய்யப் பட்டிருப்பது அசுரர்களின் ஆட்சியை நினைவுபடுத்துகிறதா த.வெ.க. அரசு” என்று தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜய காந்த் உள்ளிட்ட கட்சித்தலைவர் கள் கடும் கண்டனம் தெரிவித் துள்ளனர்.

பிரேமலதா (தே.மு.தி.க. பொதுச்செயலாளர்): தமிழகத்தில்



ஒரே நாளில் காவலர் உட்பட 15 பேர் கொலை செய்யப்பட்டதாக வெளியாகியுள்ள தகவல்கள் மிகவும் கவலைக்குரியவை. காவல் துறை உதவி ஆய்வாளர் உயிரிழந்த விவகாரத்தில் அவரது குடும்பத்திற்கு ரூ.40 லட்சம் நிவாரணம் வழங்குவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. ஒரு மனித உயிருக்கு ரூ.40 லட்சம் தான் மதிப்பா?

பொதுமக்களின் உயிருக்கும், காவல் துறையினரின் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் அளிக்க வேண்டியது அரசின் அடிப்படைக் கடமை. வெறும் அறிவிப்புகளும் ஆய்வுக் கூட்டங்களும் போதாது. தமிழகத்தில் நிலவும் சட்டம்-ஒழுங்கு சீர்கேடு குறித்து முதல்வர் மக்களுக்கு தெளிவான விளக்கம் அளிக்க வேண்டும். மக்களின் உயிருக்கு விலை நிர்ணயிப்பது நிவாரணத் தொகை அல்ல; அவர்களின் உயிரைப் பாதுகாப்பதே அரசின் முதன்மையான கடமை.

பெ.சண்முகம் (மார்க்சிஸ்ட் மாநிலச் செயலாளர்): தீபாவளியன்று ஒரே நாளில் காவல்துறை அதிகாரி, சிறுவர்கள், இளம்பெண்கள் உள்பட 15 பேர் கொல்லப்பட்டுள்ளனர். தனிப்பட்ட நிகழ்வுகள் என்று இவற்றை புறந்தள்ளி விட முடியாத அளவுக்கு பரவலாக நடந்துள்ள இந்த குற்றச்செயல்கள் மீண்டும் நடைபெறாத வகையில் தடுத்து நிறுத்த உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். பொதுமக்கள் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதற்கும், போதை கலாச்சாரத்திற்கு முடிவு கட்டுவதற்கும் தமிழ்நாடு அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.



மு.வீரபாண்டியன் (இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர்): தமிழ்நாட்டில் தீபாவளிப் பண்டிகை நாளில் வெவ்வேறு இடங்களில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர், 2 சிறுவர்கள், ஒரு இளம்பெண் மற்றும் 3 ரவுடிகள் உள்பட மொத்தம் 15 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இது அதிர்ச்சி அளிக்கிறது. கொலை, கொள்ளை, பாலியல் வன்முறைகள், போதை கலாச்சாரம் போன்றவற்றை தடுப்பதற்கும், சட்டம் ஒழுங்கை பாதுகாக்கவும் தமிழ்நாடு அரசும், முதல்வரும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

முஸ்தபா (எஸ்.டி.பி.ஐ. கட்சி மாநிலப் பொருளாளர்): மக்களின் பாதுகாப்பையும் சமூக அமைதியையும் காக்க வேண்டிய ஒரு காவல்துறை அதிகாரிக்கே பொது வெளியில் இத்தகைய கொடூரம் நேர்ந்திருப்பது, தமிழ்நாட்டின் சட்டம் - ஒழுங்கு சூழல் குறித்து பொதுமக்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும் கலக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இக்கொலை சம்பவத்தில் தொடர்புடைய அனைத்துக் குற்ற வாளிகளையும் உடனடியாக கைது செய்து, அவர்கள் மீது பாரபட்சமின்றி மிகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் போதை கலாச்சாரத்தையும், அதனால் பெருகும் குற்றச்செயல்களையும் வேரோடு களைய தமிழக அரசு உரிய கொள்கை முடிவுகளை எடுத்து, உறுதியான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் தங்களது அறிக்கையில் கூறியுள்ளனர்.

அந்துமணி சிந்துமணி



அந்துமணி : ஏண்டி சிந்து; ஆட்டைக் கடிச்சி, மாட்டைக் கடிச்சி, கடைசியிலே மனிதனை கடிச்சி... அப்பிடின்ற மாதிரி, த.வெ.க. எம்.எல்.ஏ. ஒருத்தரால் பெண் மாவட்ட ஆட்சியருக்கே பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை இருக்கே. இந்த அநியாயம் அடுக்குமா?

சிந்துமணி : ஆமாண்டி அந்து; **இந்த த.வெ.க.காரர்களின் அட்டூழியம் நாளுக்கு நாள் அதிகரிச்சு தமிழ்நாடே தலைகுனியக் கூடிய அளவிற்கு போயிட்டிருக்கு. ‘மேலே’ இருக்கறவங்களும் கேட்க முடியாத நிலை. என்ன பண்றது. காலம்தான் அவங்களை திருத்தணும்.**

செயலற்ற விஜய் ப்ரோ சத்தம் கேட்கலையோ?

குடியாத்தம் அருகே துப்பாக்கிச் சூடு!

பா.ம.க. பிரமுகர் பலி!

குடியாத்தம், நவ. 12- குடியாத்தம் அருகே பா.ம.க., பிரமுகர் ஞானவேல், 47, துப்பாக்கியால் சுட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

வேலூர் மாவட்டம், குடியாத்தம் அடுத்த சேங்குன்றம் கிராமத்தைச் சேர்ந்தவர் ஞானவேல். பா.ம.க., அன்புமணி தம்பிகள் படை மாவட்டச் செயலராக இருந்த இவர், பின்னர் ராமதாஸ் அணிக்கு சென்றதால் பா.ம.க., விலிருந்து ஓரங்கட்டப் பட்டார்.

அதே பகுதியைச் சேர்ந்தவர் பூவரசன், 29. இருவருக்கும், உள்ளூரில் யார் பெரியவர் என்ற போட்டியில் முன் விரோதம் இருந்து வந்தது. ஞானவேலு, பூவரசனுக்கு இடையே தகராறு ஏற்பட்டதில், பூவரசன் மறைத்து வைத்திருந்த நாட்டு துப்பாக்கியால் சுட்டதில், ஞானவேல் சம்பவ இடத்திலேயே பலியானார்.

ஞானவேல் உடன் இருந்த ரகு, 40, என்பவர் தோள்பட்டையில் துப்பாக்கி குண்டு பாய்ந்ததில் காயமடைந்து, குடியாத்தம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார்.

குடியாத்தம் தாலுகா போலீசார் வழக்குப் பதிவு செய்து, பூவரசனை பிடித்து விசாரித்து வருகின்றனர்.

ஒரே நாளில் 15 கொலை: ஆட்சி நடத்தத் தெரியவில்லையென்றால்

முதல்வர் விஜய் பதவி விலக வேண்டும்!

தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் வலியுறுத்தல்!

சென்னை, நவ. 12-

“ஒரே நாளில் சப்-இன்ஸ் பெக்டர் உட்பட 15 பேர் வெட்டிக்கொலை செய்யப்பட்டி ருப்பது மிகவும் வெட்கக் கேடான செயல். ஆட்சி நடத்தத் தெரியவில்லையென்றால் முதல்வர் விஜய் பதவி விலக வேண்டும்” என்று தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் வலியுறுத்தி யுள்ளார்.

இது குறித்து தமிழக பா.ஜ. தலைவர் நயினார் நாகேந்திரன் தனது எக்ஸ் தள பதிவு வருமாறு:-



ஊர் உலகமே தீபாவளிப் பண்டிகைக்காக விழாக்கோலம் பூண்டிருந்த நிலையில், சென்னை, திருவள்ளூர், தேனி, மானாமதுரை, திருச்சி, கடலூர் உள்ளிட்ட பகுதிகளில் 15 கொலைகள் நடந்திருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் கடும் அதிர்ச்சியளிக்கின்றன. கொலையானவர்களில் ஒரு காவல் சிறப்பு உதவி ஆய்வாளரும் அடக்கம் என்பது முதல்வர் விஜய்யின் நிர்வாக தோல்விக்கான அப்பட்டமான சான்று.

பண்டிகை தினங்களில் மதுப் புழக்கம் அதிகரிக்கும், அதனால் வன்முறைகள் நிகழ வாய்ப்புள்ள என என்பதை ஒரு நல்ல அரசு முன்கூட்டியே யூகித்திருக்க வேண்டும். ரோந்துப் பணிகளையும், கண்காணிப்பு பணிகளையும் பலப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால், பொதுமக்களை போலவே ஆட்சியாளர்களும் தீபாவளிக்கு விடுமுறை எடுத்துக் கொண்டு வீட்டில் முடங்கிவிட்டால், அரசு இயந்திரம் எப்படி முறையாக இயங்கும்?

அதிலும் சட்டம் - ஒழுங்கை தனது நேரடிக் கட்டுப்பாட்டில் இயக்கும் முதல்வர் விஜய், பொது மேடையில் ‘Fun, Enjoyment’ என பகிரங்கமாக போதைப் பழக்கத்தை ஊக்குவித்தால், வன்முறைகள் குறையுமா?. எனவே தான் நாங்கள் மீண்டும் மீண்டும் சொல்கிறோம், ஆட்சி நடத்த தெரியவில்லை என்றால், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியவில்லை என்றால் முதல்வர் விஜய் பதவி விலகிவிடுவது நல்லது.

இவ்வாறு தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

விஜய் ஆட்சியில் சட்டம் - ஒழுங்கு படும்பாடு!

இன்ஸ்பெக்டர் உட்பட 3 போலீசார் மீது சரமாரி தாக்கு!

படுகாயம்! மருத்துவமனையில் அனுமதி!

நெல்லிக்குப்பம், நவ.12- கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம் அடுத்த மேல் பட்டாம்பாக்கம் குளத்துமேட்டு தெரு வைச் சேர்ந்தவர் விமலா. இவரது பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர் கோமளா. இவர்கள் இருவருக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டது.

இதுகுறித்து அறிந்த விமலாவின் உறவினர் நண்பர்களான புகழ் (வயது 23), ஜெகதீஷ் ஆகியோர் மேல்பட்டாம்பாக்கத்திற்கு சென்றனர். அங்கு விமலாவுக்கு ஆதரவாக புகழ் உள்பட 8 பேர் கோமளா தரப்பினரிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். அப்போது இரு தரப்பினரிடையே திடீரென வாக்குவாதம் ஏற்பட்டு அது மோதலாக மாறியது.

இதுகுறித்த தகவலின் பேரில் நெல்லிக்குப்பம் இன்ஸ்பெக்டர் வேலுமணி தலைமையில் டர் செந்தில்குமார், ஏட்டு அமிர்தராஜ் ஆகியோர் சம்பவ இடத்துக்கு விசாரணை நடத்த விரைந்து சென்றனர்.

அப்போது, புகழ், ஜெகதீஷ், ஹரிஹரன் ஆகிய 3 பேரும் இன்ஸ்பெக்டர் வேலுமணி, சிறப்பு சப்இன்ஸ்பெக்டர், ஏட்டு ஆகிய 3 பேரையும் சரமாரியாக தாக்கினர். இதில் காயமடைந்த அவர்கள் 3 பேரும் கடலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர்.

சந்தி சிரிப்பது சட்டம் - ஒழுங்கு மட்டுமல்ல;

த.வெ.க. ஆட்சியில் அரசுப் பணம் ரூ.22.10 கோடியும் திருட்டு!

நிர்வாகத் திறனற்ற விஜய் ஆட்சியின் அலங்கோலங்கள்!

சென்னை, நவ.12- சைபர கிரைம் போலீ சார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

புதுச்சேரி மகாத்மா காந்தி பல்கலைக்கழகத்தில் கைவரிசை காட்டிய கும்பல், அடுத்த கட்டமாக தமிழக ஊரக வளர்ச்சித்துறையின்கீழ் பராமரிக்கப் படும் வங்கிக் கணக்குகளில் இருந்தும் கோடிக் கணக்கான ரூபாய் டிஜிட்டல் முறையில் மோசடி செய்து திருடியிருக்கிறது என்று தகவல்கள் வெளியாகி உள்ளது.

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் ஊராட்சி ஒன்றியத்தின் வங்கி கணக்கில் ரூ.14 கோடி திருடப்பட்டுள்ளது. அதே போல் நாகை ஊராட்சி ஒன்றியத்தின் வங்கி கணக்கில் ரூ.3.10 கோடி அதே கும்பல் திருடியுள்ளது. தாம்பரம் ஊராட்சி ஒன்றியத்தின் வங்கி கணக்கில் ரூ.5 கோடி திருடியுள்ளது. இது தொடர்பாக தமிழ்நாடு அரசு வங்கிக் கணக்குகளில் இருந்து ரூ.22.10 கோடி பணம் திருடப்பட்டிருக்கிறது. இந்த சம்பவத்தில் நைஜீரியா கும்பலுக்கு தொடர்பு இருக்கலாம் என சைபர் கிரைம் போலீஸ் சந்தேகம் அடைந்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் ஊராட்சி ஒன்றியத்தின் வங்கி கணக்கில் ரூ.14 கோடி திருடப்பட்டுள்ளது. அதே போல் நாகை ஊராட்சி ஒன்றியத்தின் வங்கி கணக்கில் ரூ.3.10 கோடி அதே கும்பல் திருடியுள்ளது. தாம்பரம் ஊராட்சி ஒன்றியத்தின் வங்கி கணக்கில் ரூ.5 கோடி திருடியுள்ளது. இது தொடர்பாக ரூ.22.10 கோடி என மொத்தம் ரூ.22.10 கோடி அரசு நிதி மோசடி செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது

இந்த நிதி அனைத்துமே, 15வது நிதிக்குழு மானியத்தின்கீழ் ஊரக கப்பகுதிகளில் சுகாதார நல மையங்களை கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட திட்டத்துடன் தொடர்புடையது ஆகும். தமிழகத்தின் பல்வேறு ஊராட்சிகளில் தலா ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் சுகாதார நல மையக்கட்டிடங்கள் அமைக்கும் திட்டப்பணிகளுக்கான நிதிஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந்த பரிவர்த்தனைகளை கண்காணித்து வருகிறோம். பரிவர்த்தனைகள் மூலம் பணம் மாற்றப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. சுகாதார நலமையங்கள் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட அரசுத்திட்ட நிதியை மோசடி மூலம் சித்துறையில் மாநில அளவிலான ஒற்றை மைய வங்கிக்கணக்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. மாவட்ட நிர்வாகம் பணிகள் நிறைவடைந்ததற்கான அறிக்கையை அளித்த பின்னரே, சம்பந்தப்பட்ட நிதி விடுவிக்கப் படும். தொடர்ந்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மூலம் ஒப்பந்தக்காரர்களுக்கு பணம் வழங்கப்படும். இது தான் எப்போதுமே நடைமுறையாக பின்பற்றப்படுகிறது.

சென்னையில் இருந்தே இந்த வங்கி கணக்குகள் நிர்வகிக்கப் படுகிறது. இந்த சூழலில் இணையவழியாக ஊடுருவி, பல்வேறு பரிவர்த்தனைகள் மூலம் ரூ.5 கோடி திருடியுள்ளனர். இதில் மாநில அளவிலான ஒற்றை மைய வங்கிக்கணக்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. மாவட்ட நிர்வாகம் பணிகள் நிறைவடைந்ததற்கான அறிக்கையை அளித்த பின்னரே, சம்பந்தப்பட்ட நிதி விடுவிக்கப் படும். தொடர்ந்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மூலம் ஒப்பந்தக்காரர்களுக்கு பணம் வழங்கப்படும். இது தான் எப்போதுமே நடைமுறையாக பின்பற்றப்படுகிறது.

சென்னையில் இருந்தே இந்த வங்கி கணக்குகள் நிர்வகிக்கப் படுகிறது. இந்த சூழலில் இணையவழியாக ஊடுருவி, பல்வேறு பரி

‘வெற்றி’ தீபாவளி ஸ்பெஷல் கொலைகள்!

